**கவனிக்க.**- 2024.05.03 ஆந் திகதிய 2383 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2384 - 2024 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2024.05.10

*2384 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1078 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1090 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1-B 82565-5,441 (2024/05)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

*சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் கனிஷ்ட உதவி அரச சட்டத்தரணி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024*

சட்ட மாஅதிபர் திணைக்களத்தில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நிதிகளின்படி கனிஷ்ட உதவி அரசாங்க சட்டத்தரணி பதவிகளில் காணப்படும் 05 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை சட்டமா அதிபர் திணைக்களத்தின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விண்ணப்பங்கள் கீழ்க்காணும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இலக்கம் 502, கொழும்பு 12 என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கனிஷ்ட உதவி அரசாங்க சட்டத்தரணி பதவிக்கான விண்ணப்பம் - 2024 என தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி : 2024.06.10 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் தொலைந்து விட்டதாகவோ அல்லது தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தபாலில் தாமதமாகி விட்டதாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும். இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களினை தாமதமாக அனுப்பி வைப்பதால் ஏற்படக்கூடிய இழப்புக்களினை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும். அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விணண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் வழங்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

01. **ஆட்சேர்ப்பு முறை** -

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் முதல் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள். இறுதி தகுதி மதிப்பீட்டில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இறுதி தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது தகைமை வரிசையின் அப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் சேவையின் தேவைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். அங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 09 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது) புள்ளிகளின் நடைமுறைகளுக்கு ஏற்ப முதல் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி ஆகியவை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

02. **சேவை நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். நீங்கள் தகைமை வாய்ந்த ஓய்வூதியத் திட்டம் குறித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை முடிவுக்கு கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அவ்வப்போது அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படும் பங்களிப்புக்களையும் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்கள்;

(iii) 2020.10.16 ஆந் திகதியுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின்படி ஏனைய அரச கரும மொழி(களில்) தேர்ச்சி பெறுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகத்தர் சேவை வகையீட்டுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் திணைக்களத்தின் ஏனைய பணிப்புரைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் என்பவற்றிற்கு இந்த நியமனம் உட்பட்டதாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவியானது, AGS 1-2016, ரூபா 47,615.00-10 × 1,335 - ரூபா 60,965.00 எனும் சம்பள அளவுத்திட்டத்திற்கு (மாதாந்தம்) உரித்துடையதாகும்.

04. **கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :**

இலங்கையின் உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து இருத்தல் வேண்டும் மற்றும் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வலிதான நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தினை வைத்திருத்தல் வேண்டும். பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகள் மேலதிக தகைமையாக கருதப்படும்.

05. **அனுபவம் :**

குறித்த துறையில் பெற்றுக்கொண்ட அனுபவமானது விசேட தகைமையாக கருதப்படும்.

06. **வயது எல்லை :**

பரீட்சார்த்தி விண்ணப்ப இறுதித் திகதியின் போது 22 வயதுக்கு குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

07. **உடல் ரீதியான தகைமைகள் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எப் பாகத்திலேனும் கடமையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

08. **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும். (20 வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தினைக் கொண்டுள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் பத்திரமொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

(iii) இலங்கைச் சட்டங்களின் கீழ் ஏதேனும் குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியான 2024.06.10 ஆந் திகதியன்று இந்தப் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

09. **முதல் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை**.-

1. முதல் திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையானது பின்வரும் புள்ளிகளின் அடிப்படையில் அமையும்:

| தொடர் இலக்கம் | புள்ளி வழங்கப்படும் முறை | புள்ளிகள் | கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 01. | **கல்வித் தகைமைகள்** | | |
| | (i) இலங்கை சட்டக்கல்லூரி இறுதியாண்டு பரீட்சையில் முதலாம் வகுப்பு சிறப்பு சித்தி | 08 | 20 |
| | (ii) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் சட்டப்பட்டப் படிப்பு (LLB) முதலாம் வகுப்பு சித்தி | 07 | |
| | (iii) இலங்கை சட்டக்கல்லூரி இறுதியாண்டு பரீட்சையில் இரண்டாம் வகுப்பு சிறப்பு சித்தி | 06 | |
| | (iv) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் சட்டப்பட்டப் படிப்பு (LLB) இரண்டாம் வகுப்பு சித்தி | 06 | |
| | (v) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப் படிப்பு (LLB) இரண்டாம் வகுப்பு சித்தி | 05 | |
| | (vi) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப் படிப்பு (LLB) | 04 | |
| | (vii) இலங்கை சட்டக் கல்லூரியால் வழங்கப்படும் குறித்த துறையில் சட்டம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 03 | |
| | (viii) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் குறித்த துறையில் சட்டம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 02 | |

| தொடர் இலக்கம் | புள்ளி வழங்கப்படும் முறை | புள்ளிகள் | கூடிய புள்ளி |
|---|---|---|---|
| | (ix) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் சட்டம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு<br>அரசாங்க அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் என்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் ஆகும்.<br>(மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகைமைகளும் அதிகபட்சம் 20 புள்ளிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)<br>* மேற்குறித்த கல்வித் தகைமைகள் சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும். | 03 | |
| 02. | **தொழிற் தகைமைகள்** | | 20 |
| | (i) சுறுசுறுப்பாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் செயற்படும் திறன்களைக் கொண்டிருத்தல். (ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்) | 10 | |
| | (ii) அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்ட நிறுவனத்தில் வழக்கறிஞராக சுறுசுறுப்பாகவும் வெற்றிகரமாகவும் செயற்பட்டு வெளிப்படுத்திய செயல் திறமைகள். | 10 | |
| | (மேற்குறித்த திறன்களுக்கான சான்றிதழ்கள் சம்ர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)<br>**குறிப்பு :** நீதிபதியொருவரிடமிருந்து தொழிற் திறன் சம்பந்தமான சான்றிதழ் மற்றும் 20 ஆண்டுகளுக்கு குறையாத சேவையைப் பூர்த்தி செய்த இரண்டு சட்டத்தரணிகளிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்கள் ஏற்புடையதாகாது. | | |
| 03. | **விஷேட திறமைகள்** | | 20 |
| | (i) தொடர்பாடல் திறமை | 05 | |
| | (ii) முன்நின்று உரையாற்றும் திறமை | 05 | |
| | (iii) சபையின் முன் வெற்றிகரமாக ஆஜராகும் திறமை | 05 | |
| | (iv) மொழியினைக் கையாளும் திறமை | 05 | |
| 04. | **நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தும் திறமை** | | 40 |
| | (i) ஆளுமை | 05 | |
| | (ii) சுயமாக செயற்படும் திறமை | 15 | |
| | (iii) தலைமைத்துவப் பண்பு | 05 | |
| | (iv) சட்டம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான அறிவு | 15 | |
| | **மொத்தம்** | | 100 |

II. இறுதி திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையானது பின்வரும் புள்ளிகளின் அடிப்படையில் அமையும் :

| | பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் பிரதானமான துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| i. | வாதிடும் திறமை | 25 |
| ii. | விடயங்களை முன்வைக்கும் திறமை | 25 |
| iii. | கேள்விகளுக்கு பதிலளிக்கும் திறன் | 25 |
| vi. | அடிப்படை சட்டக் கோட்பாட்டு அறிவு | 25 |
| | **மொத்தம்** | **100** |

10. **பரீட்சார்த்தியினை அடையாளங் காணுதல்.**- அனைத்து விடயங்களையும் முறையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் பரீட்சார்த்திகள் திறன் மதிப்பாய்வு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக சான்றுப்படுத்திய பிரதிகள் என்பன நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது, பரீட்சார்த்திகளின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை :
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

கவனித்திற் கொள்க :
(அ) விண்ணப்ப அறிவித்தலின் 9-I இல் உப இல. 01 மற்றும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகளின் உறுதி செய்வதற்காக சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.
(ஆ) நேர்முகத் தேர்வின் போது தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- நீங்கள் அனுப்பிய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விவரங்கள், ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறான அல்லது பிழையானதாகக் கண்டறியப்பட்டால், உங்களின் விண்ணப்பம் இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற தவறான அல்லது பிழையான விவரங்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால், எந்த நேரத்திலும் உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுள்ளது.

13. வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சஞ்ஜய் ராஜரட்ணம்,
சட்ட மாஅதிபர்.

உச்ச நீதிமன்ற கட்டிடத்தொகுதி,
சட்ட மாஅதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2024, ஏப்பிறல் 30.

05-127

---

## காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான (காஆஆ) உறுப்பினர்கள் நியமனம்

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (காஆஆ) உறுப்பினர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக;

- நிகழ்வு கண்டறிதல் அல்லது நுண்ணாய்வு,
- மனிதவுரிமைகள் சட்டம்,
- சர்வதேச மனிதாபிமான சட்டம்,
- மனிதாபிமான பதிலிறுப்பு

என்பவற்றின் முன்னனுபவம் கொண்டவர்களிடமிருந்தும்

- அல்லது, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான ஏனைய தகைமைகளை உடையவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் காஆஆ விற்கான உறுப்பினர்கள் நியமனம் என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2024, மே 27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் கடித உறையின் இடத பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடவும்;

அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்.

அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்,
இலங்கைப் பராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

05-148

## இலங்கைப் பாராளுமன்றம்

## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடம் நிலவும் பின்வரும் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய மத்திய மாகாணத்தில் நிரந்தரமாக வதியும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரித்த விண்ணப்பங்கள், கல்வித் தகைமை /தொழில் தகைமை /ஏனைய தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் “பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்).

**கவனிக்க வேண்டியது**: விண்ணப்பிக்கப்படும் பதவியை விண்ணப்பப்படிவத்திலுள்ள இடைவெளியில் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

**மேற்பார்வையாளர்/செலவுப்பட்டியல் எழுதுநர்**

1. **சம்பள அளவுத்திட்டம் :**

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 32,330 - 3 × 380-10 × 445-4×660- ரூபா 40,560 ஆகும்.

2. **தொழில் பற்றிய விபரம் :**

செலவுப்பட்டியல்களைத் தயாரித்தல், வீடு பராமரிப்பு, தோட்ட அலங்காரம் மற்றும் உணவுபானங்கள் வழங்கல் ஆகிய கருமங்களுடன் தொடர்புடைய அலுவலகப் பணிகளை மேற்பார்வை செய்தல்.

3. **பணியாற்றும் நிலையம் :**

நுவரெலியா சேனாதிபதி இல்லம்

4. **விண்ணப்பிக்கக்கூடிய நபர்கள் :**

இந்தப் பதவிக்கு மத்திய மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த கிராம உத்தியோகத்தர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

5. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச/ பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

6. **கல்வித் தகைமைகள் :**

(i) கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்/ கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

(ii) கல்விப் பொது (சாதாரண தராதரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

7. **தொழில் தகைமைகள் :**

(i) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஹோட்டல் பாடசாலையினால் நடத்தப்படும் 05 மாதங்களுக்கு குறையாத முழுநேர வீடு பராமரிப்பு அடிப்படை மட்ட பாடநெறி ஒன்றை அல்லது உணவுபான சேவை தொடர்பான அடிப்படை மட்ட பாடநெறி ஒன்றை (Basic Level Course in House Keeping or Basic Level Course in Restaurant and Bar Service) பின்பற்றி சான்றிதழை பெற்றிருத்தல்

மற்றும்

(ii) வாழ்க்கைத்தொழில் பயிற்சி (VTA) அதிகார சபையில்/ தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது ஒரு நிறுவனத்தில் ஆறு மாதங்களுக்கு குறையாத கணனிப் பிரயோகம் பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல்.

8. **அனுபவம்**:

சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்ற ஒரு ஓய்வு இல்லத்தில் அல்லது ஹோட்டலில் மேற்பார்வை மட்டப் (Supervisory Level) பதவி ஒன்றில் 02 வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**: அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் செலவுப்பட்டியல் எழுதுநர் பதவியில் அல்லது அதற்கு சமனான ஒரு பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாக கருதப்படும்.

9. **ஆட்சேர்ப்பு நடைமுறை**:

எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

10. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**:

(அ) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்கான ஓய்வூதிய சம்பளம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் உடன்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கெனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள் /தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

11. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவச் சான்றிதழ்கள்

12. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

13. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

14. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் காரணமாக அமையும்.

15. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள /நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2024, மே 10.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

............................ **பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்):-

.............................................................................................................................................

.............................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்):-

.............................................................................................................................................

.............................................................................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (Mr./Mrs. /Miss.):-

.............................................................................................................................................

.............................................................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம்:- 

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. (அ) (i) தனிப்பட்ட முகவரி:-

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(ii) மின்னஞ்சல் முகவரி:- ...............................................................................................

(iii) தொலைபேசி இலக்கம்:- 

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iv) Whatsapp இலக்கம்:- 

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி:-

.............................................................................................................................................

.............................................................................................................................................

தொலைபேசி இலக்கம்:- 

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:- ..........................................................................

(பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிற்கு வயது:- வருடங்கள் :.......... மாதங்கள்:........... நாட்கள்:.........

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :- (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால்நிலை:- (ஆண்/பெண்)

07. இலங்கைப் பிரஜையா:- (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகளும் அனுபவமும்:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

| பரீட்சை | பாடங்கள் | சித்திகள் | சித்தி பெற்ற ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (உ./த.) | | | |
| | | | |
| | | | |
| | | | |

| பரீட்சை | பாடங்கள் | சித்திகள் | சித்தி பெற்ற ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (சா./த.) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. உயர் கல்வி/தொழில் தகைமைகள்: (சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

10. அனுபவம்:- (அனுபவம் பற்றிய சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் ........................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:-...................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி:-............................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்:-........................................................................................

(உ) கொடுப்பனவுகள்:-...........................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம்:-...................................................................................................

12. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா? அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக: (ஆம்/இல்லை)

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

*13.* நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா?

அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களை குறிப்பிடுக: (ஆம்/இல்லை)

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் தவறானது அல்லது பொய்யானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி:- ........................................ ..................................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில் ...................................................................................................................................... பதவியை வகிக்கின்ற திரு./திருமதி/செல்வி ......................................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் /நிரந்தரமாக்கப்படவில்லை, இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமுமில்லை என உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. தயவு செய்து தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்)

திகதி: ................................

..........................................................................................................

திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்

(உத்தியோகபூர்வ முத்திரை)

*05-191*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

## விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக இலங்கை விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

## Open competitive Examination for the enrollment of students for the Higher National Diploma in Agricultural Production Technology in Sri Lanka School of Agriculture - 2024

விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த இலங்கை விவசாயப் பாடசாலைகளில் நடைபெறும் "விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை (NVQ-6) கற்பதற்காக 2025/ 2027 ஆம் கல்வியாண்டுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவினால் 2024, செத்தெம்பர் மாதத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரதான சில நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. **விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி**

2.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை 6 மட்டம் (NVQ level 6) வழங்கப்படுகின்றது.

2.2 இக் கற்கைநெறியானது விவசாயத் திணைக்களத்தின் அங்குணுகொலபெலஸ்ஸ, கரப்பிஞ்ச, குண்டசாலை, பெல்வெஹர, வவுனியா ஆகிய விவசாயப் பாடசாலைகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான கற்கை நெறியாக மேற்கொள்ளப்படுகின்றது.

2.3 இக்கற்கை நெறிக்கான காலம் 2 ½ வருடங்களாகும். இதில் 2 வருடங்கள் விவசாயப் பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கமைய பயிற்சி வழங்கப்படும். மேலும் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (NAITA) மேற்பார்வையின் கீழ் 06 மாத காலத்திற்கு தொழில் சார் பயிற்சி ஒன்றினை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

2.4 ஆங்கில மொழியில் மட்டும் நடாத்தப்படும் இக்கற்கை நெறியானது முழு நேர உள்ளகக் கற்கைநெறியாகும்.

2.5 மாணவர்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கற்கைநெறியினை கற்பதற்கு தகைமை பெற்றவர்களின் தகைமைகளின் உண்மை நிலை நேர்முகப் பரீட்சை மூலம் பரீட்சிப்பதன் மூலம் விவசாயப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

03. **கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கு காணப்பட வேண்டிய தகைமைகள்**

3.1 **கல்வித் தகைமைகள்**

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சிங்களம் / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் கட்டாயமாக திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்வான சித்தி அடைந்திருத்தல் வேண்டும். மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்;

அத்துடன்

க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் / விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தி (S) 03 இனை ஒரே முறையில் பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

க.பொ.த. உயர் தர பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம் / பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஒரே முறையில் மூன்று பாடங்களிலும் குறைந்தது சாதாரண சித்தி(S) பெற்றிருத்தல் வேண்டும்.

**முக்கியம்** - க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை பயின்றிருந்தால் தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.2 விண்ணப்பதாரிகள் 2024.06.10 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 1999.06.10 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னராகவோ 2006.06.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடுகளுடன் தொடர்பான செய்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது. எனவே இக்கற்கைநெறியினை கற்பதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாக பொருத்தமானவராக இருத்தல் வேண்டும். கற்கை நெறியில் சேரும் தருணத்தில் கர்ப்பமாக இருந்தால் கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கும், கற்கை நெறியில் சேர்ந்த பின்னர் கர்ப்பமாவது கற்கை நெறியில் இருந்து விலக்குவதற்கும் காரணமாக அமையும்.

3.4 இக்கற்கைநெறியினை பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடைவராகமாட்டார்கள்.

3.5 அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

## 04. பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் மொழி

4.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயப் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

4.2 போட்டிப் பரீட்சை கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 2024, செத்தெம்பர் மாதத்தில் நடத்தப்படும். விண்ணபப்படிவத்தினை பூர்த்தி செய்யும் பொழுது நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விருப்பமுடைய நகரம் மற்றும் அதற்குரிய இலக்கத்தினை குறிப்பிட்ட இடத்தில் பதிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

| நகர இல. | நகரம் |
|---|---|
| 1 | அம்பாறை |
| 2 | அநுராதபுரம் |
| 3 | தம்புள்ளை |
| 4 | கம்பஹா |
| 5 | காலி |
| 6 | அம்பாந்தோட்டை |
| 7 | கண்டி |
| 8 | குருநாகல் |
| 9 | வவுனியா |

4.3 குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றிக்கு போதியளவு எண்ணிக்கையான பரீட்சாத்திகள் விண்ணப்பிக்காதவிடத்து அல்லது வேறு ஏதேனும் செயன்முறை பிரச்சினைகள் ஏற்படுமாயின் பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ள பரீட்சை நிலையத்திற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையம் விவசாயத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும்.

## 05. விண்ணப்பப்படிவங்கள் கோரல்

5.1 இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் நிகழ்நிலை (online) முறை மூலம் மேற்கொள்ளப்படும். விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk என்ற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

5.2 விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு முதன் முறை தோற்றிய மாவட்டம் அவருக்கு உரித்தான மாவட்டம் என கருதப்படுவதுடன் விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்யும் பொழுது நீங்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய மாவட்டத்தினை உரிய இடத்தில் குறிப்பிட வேண்டும்.

5.3 பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1300.00 ஆகும். மக்கள் வங்கி பேராதனை கிளையில் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 057100179027204 கொண்ட கணக்கிற்கு பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றுச் சீட்டு வழங்கப்பட்ட திகதி, கிளை மற்றும் இலக்கம் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

5.4 விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் மட்டும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தொடர்பாக ஏதும் பிரச்சினைகள் காணப்படின் 081-2388340/081-2388341 எனும் தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

5.5 பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கவோ, வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றி அளிக்கவோ முடியாது.

5.6 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2024.06.10 தினத்தின் பின்னர் விண்ணப்பப்படிவம் இணையத் தளத்திலிருந்து நீக்கப்படும்.

5.7 நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரத்தின் கடின நகல் (Hard copy) பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும்.

5.8 கடின நகல் (Hard copy) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளுடன் கட்டாயமாக பதிவுத் தபாலில் 2024.06.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (விரிவாக்கற் பயிற்சி) விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி (NVQ-6) என குறிப்பிட வேண்டும்.

**இணைப்பு**

i. க.பொ.த (சாதாரணதர) பரீட்சை மதிப்பெண் சான்றிதழின் நகல் பிரதி;

ii. க.பொ.த (உயர்தர) பரீட்சை மதிப்பெண் சான்றிதழின் நகல் பிரதி;

iii. பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி;

iv. பிறப்புச் சான்றிதழின் நகல் பிரதி;

v. தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதி.

குறிப்பிட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிரமாதமாகும் அல்லது காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

5.9 மேலே 5.8 இல் குறிப்பிட்ட சகல இணைப்புக்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களின் கடின நகல் விவசாயத் திணைக்களத்திற்கு கிடைக்காமை பரீட்சை எழுதுவதற்கான தகுதியை இழந்ததாகக் கருதப்படும். எனவே குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு ஆகியவற்றின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும்.

**அடையாளத்தை உறுதி செய்தல்**

6.1 பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் அவர்கள் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிபடுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒன்று மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

07. **பரீட்சை முறைமை**

7.1 போட்டிப் பரீட்சை விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை என்பன முறையை 01 மணித்தியாலம் என்ற வகையில் நடைபெறுவதுடன், ஒவ்வொரு விடயத்திற்கும் 100 மதிப்பெண்கள் என்ற வகையில் வழங்கப்பட்டு இறுதி மதிப்பெண்ணாக 200 இற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் அறிவிக்கப்படும்.

7.2 ஒவ்வொரு விடயத்திலும் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 30% மதிப்பெண்கள் பெற வேண்டும்.

7.3 **பாடவிதானம்**:

**விவசாயம்**: க.பொ.த (உயர் தரம்) விவசாயப் பாடத்திற்கமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க வினாக்களை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விவேகப் பரீட்சை** : இவ்வினாப்பத்திரமானது ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க வினாக்கள் 50 இனை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

7.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டின் கடின நகலை சரியான முறையில் இணைத்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். அது தொடர்பாக குறுஞ் செய்தி மூலம், விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைப் பரிவின் மூலம் அறிவிக்கப்படும். நுழைவுச் சீட்டு தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பான விபரங்களை 081-2388085 அல்லது 081-2388059 என்ற இலக்கம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

7.5 விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளும் வழிகளான ஈமெயில் முகவரி, Whatapps இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை ஆட்சேர்ப்பு நடவடிக்கை நிறைவு பெறும்வரை மாற்றாமல் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க வேண்டும். அந்த இலக்கங்களை மாற்றுவதன் மூலம் ஏற்படும் சங்கடங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

7.6 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஒருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதப்போதகர் ஒருவரினால் உறுதிப்படுத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7.7 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.8 பரீட்சையினை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்ட திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

7.9 போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மாவட்ட அடிப்படையில் விவசாயத் திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடப்படும் இம் மதிப்பெண்களின் அடிப்படையில் மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள் மாவட்ட அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமையும் மற்றைய தகைமைகளும் பரீட்சிக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு எதுவித மதிப்பெண்களும் வழங்கப்பட மாட்டாது. விவசாயப் பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையான மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

7.10 பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் விவசாயக் கல்லூரி அனுமதிக்கு தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இவ்வறிவித்தலுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.11 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**08. தெரிவு செய்யப்படும் முறை**

8.1 குறித்த வருடத்தில் சகல விவசாயப் பாடசாலைகளுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் விவசாயப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

8.2 மாவட்ட அடிப்படையில் மாணவர்களை தெரிவு செய்யும் போது க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே குறித்த விண்ணப்பதாரியின் மாவட்டமாக கருதப்படும்.

8.3 குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படும் ஆண் மற்றும் பெண் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆண், பெண் விடுதிகளில் உள்ள இடவசதி மற்றும் அப்பாடசாலைகளில்

கற்கை நெறிக்கான வசதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். எனவே மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் மதிப்பெண் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே மாறுபடக்கூடும்.

8.4 விவசாயப் பாடசாலைகளில் உச்ச எண்ணிக்கையானவர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனும் ஒரு மாவட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்களின் எண்ணிக்கையானது தேவையான தகைமைகளை நிறைவு செய்யவில்லை எனில் அச்சந்தர்ப்பத்தில் வேறு மாவட்டங்களில் தேவையான மாணவர்களின் எண்ணிக்கை அவர்கள் போட்டிப் பரீட்சையில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

8.5 ஏதும் ஒரு விண்ணப்பதாரி இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்கு முறையற்ற விதத்தில் முயற்சி செய்தலானது குறித்த விண்ணப்பதாரி இப்பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கு பொருத்தமற்றவராவதற்கு காரணமாக அமையும்.

8.6 பாடநெறியை தொடர்வதற்கான தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் குறித்த விவசாயக் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் வேறும் விவசாயக் கல்லூரிகளுக்கு மாறுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.7 இப்பாடநெறியானது முழுமையாக தங்குமிட வசதியுடன் கூடியதாகும். எனவே இப்பாடநெறிக்காக பதிவு செய்ததன் பின்னர் பாடநெறியை கைவிட்டு சென்றால் இப்பாடநெறியை மீள தொடர்வதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

8.8 மாணவர்களை இப்பாடநெறிக்கு அனுமதிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

8.9. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிப்பாளர் நாயகம்

விவசாயத் திணைக்களம்,
பேராதனை.

05-66

---

## இலங்கைப் புகையிரத திணைக்களம்

### இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையில் உதவி ஆய்வாளர் III ஆம் தர பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பம் கோரல் – 2024

அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் 2018.01.04 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை பிரிவில் ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையில் உதவி ஆய்வாளர் III ஆம் தர பதவியில் நிலவும் 03 வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான போட்டிப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பகின்றன.

01. **தகைமைகள் :-**

1.1 **கல்விசார் தகைமைகள் :**

(அ) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் என்பவற்றுடன் மேலும் ஒரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் 06 பாடங்கள் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) இரசாயனவியல் மற்றும் பௌதீக விஞ்ஞான பாடங்கள் இரண்டையும் உள்ளடக்கி பௌதிகவியல் பாடப்பரப்புக்கு உரிய 03 பாடங்களில் (பொது அறிவு பரீட்சை தவிர்ந்த) கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பவியலை உள்ளடக்கி தொழில்நுட்பவியல் பாடப் பரப்பிற்குரிய 03 பாடங்களில் (பொது அறிவு பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 **தொழில்சார் தகைமைகள் :**

துறை சார்ந்த கீழ்வரும் பாடநெறிகளில் ஏதேனும் ஒரு பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழை பெற்றிருத்தல்.

(i) மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா;

(ii) களனி பல்கலைக்கழகத்தில் ஒரு வருட முழுநேர பிரயோக இரசாயனவியல் டிப்ளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழை பெற்றிருத்தல் (Diploma in Applied Chemistry) ;

(iii) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனுமொரு தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் பதவிக்கு ஏற்புடைய துறையில் தொழிலநுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து ஏற்புடைய சான்றிதழை பெற்றிருத்தல்;

(iv) NVQ06 மட்டத்திற்கு சமமான அல்லது அதை விட உயர் மட்டத்தில் இருக்கும் துறைக்குரிய பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழை பெற்றிருத்தல்.

1.3 **அனுபவம்** : ஏற்புடையதல்ல

1.4 **உடற்சார் தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமை புரிவதற்கும் தேவையான உடல் மற்றும் உளதளவிலான தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

1.5 **வேறு தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையை கொண்டவராக இருத்தல் வேண்டும்;

(3) ஏதேனுமொரு மதம் சார்ந்த நிறுவனமொன்றில் துறவினை பூண்டிருக்கும் எவருக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை இல்லை ;

(4) விண்ணப்பதாரி குறித்த தகைமைகள் மற்றும் குறித்த வயது எல்லையை விண்ணப்ப கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் நிறை செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு ஆட்சேர்த்து கொள்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவசியமான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவார். தகைமைகளை உறுதிசெய்வதன் பொருட்டு சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

1.6 **வயது**:

குறைந்தபட்ச வயதெல்லை - 18 வருடங்களுக்கு குறையாமல்

அதிகபட்ச வயதெல்லை - 30 வருடங்களை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

02. நியமிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை 03 ஆகும். அவ் வெற்றிடங்களை நிரப்புகையில் சம புள்ளிகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள். வெற்றிட எண்ணிக்கையை விடவும் அதிகமாக காணப்படுமிடத்து அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் தீர்மானமானது நடைமுறை விதிகோவையின் 80 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

03. **சேவை நிபந்தனைகள்**

3.1 அரசாங்க சேவையில நியமனங்களை கட்டுப்படுத்துகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இல. PSC/ EST/ 04-01-43/04/2017 மறறும் 2018.01.04 ஆந் திகதியன்று அனுமதிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையின் ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்படும் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மற்றும் பின்னகத்து செய்யப்படும் திருத்தங்களுக்கும் தாபனக்கோவையில் அல்லது நிதி பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் இல. 2310/29 உடைய மற்றும் 2022.12.14 ஆந் திகதியையுடைய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைகோவையின் விதிகளுக்கும் கீழ்படிவதாகும்.

3.2 இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சட்ட முறைக்கு பங்களிப்பு தொகையினை செலுத்த வேண்டும்.

3.3 தமக்கு வழங்கப்பட்டுள்ள பதவியில் கடமையை குறித்த திகதியில் பொறுப்பேற்க தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமையை பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது தவறும் விண்ணப்பதாரியின் நியமனத்தை ரத்து செய்வதற்கான அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆணைப்படி காணப்படுகின்றது.

04. **மாதாந்த சம்பள அளவீடு** : 2016.02.25 ஆந் திகதியையுடைய 03/2016 உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இப்பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவீடு ரூபா 31,040-10 × 455 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550.00 (MT 03- 2016) ஆகும். அதாவது ரூபா 31,040.00 எனும் ஆரம்ப சம்பள மட்டத்தில் வைக்கப்படுவர். அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே தாங்களுக்கு சம்பளம் வழங்கப்படும். இதங்கு மேலதிகமாக அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய கொடுப்பனவுகளும் தாங்களும் உரித்தாகும்.

05. **ஆட்சேர்ப்பு முறைமை**.- எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் பொது நேர்முக பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எழுத்துமூல பரீட்சையில் தோற்றிய விண்ணப்பதாரிகளின் மொத்த புள்ளிகளின் திறமைமுறைக்கமைய ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

5.1 எழுத்துமூல பரீட்சை :

| பாடங்கள் | காலம் | மொத்த புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| விடயம் தொடர்பிலான தொழில்நுட்ப பரீட்சை | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

5.2 தொழில்முறைசார் பரீட்சை : ஏற்புடையதல்ல.

5.3 பொது நேர்முக பரீட்சை : புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் கடமைகளை பரீட்சித்தல் மட்டுமே இடம்பெறும்.

06. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆகும். பரீட்சை கட்டணம் புகையிரத பொது முகாமையாளரின் பெயரில் மக்கள் வங்கியின் கணககிலக்கம் 176100129027313 உடைய கணக்கிற்கு வரவு வைத்து விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி தினத்திற்கு முன்னர் விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் ஓரத்தை விண்ணப்பத்தில் குறித்த இடத்தில் கழறாத வண்ணம் ஒட்டவும். அப்பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது உபயோகமானதாக இருக்கும்.

(i) பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட பணமானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிசெலுத்தப்படமாட்டாது;
(ii) பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

07. **விண்ணப்பிக்கும் முறை** :-

(அ) விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழியில் தன்னுடைய சொந்த கையெழுத்தில் விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும். விண்ணப்பத்தை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள

பரீட்சையின் பெயரானது சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடுவது அத்தியாவசியமாகும். பரீட்சை தொடர்பில் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை (பிரதி ஒன்றினை தங்கள் வசம் வைத்திருப்பது உபயோகமானதாக இருக்கும்) 2024.06.10 ஆந் திகதிக்கு முன்னர் கீழ் காணப்படும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

புகையிரத பொது முகாமையாளர்,
புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
த. பெ. 355, ஓல்கோர்ட் மாவத்தை,
கொழும்பு.

(இ) விண்ணபத்தை இட்டு அனுப்பும் உறையின் இடப்பக்க மூலையில் இலங்கை புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வையாளர் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையில் உதவி ஆய்வாளர் III தர பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்ப கோரல் 2024 எனத் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

08. **பரீட்சைக்கு பிரவேசித்தல்** :

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளார்கள் என்று பூர்வ அடிப்படையில் பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுசீட்டுடன் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பிரவேச அனுமதி பத்திரங்கள் வழங்கப்படும். தமது பிரவேச அனுமதி பத்திரங்களை சமர்ப்பிக்க தவறுபவர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்குரிய பிரவேச அனுமதி பத்திரத்தில் கையொப்பத்தை உறுதிபடுத்திகொண்டு முதலில் அதை அவ் மண்டபத்தில் உள்ள அதன் மண்டலாதிபதியிடம் கையளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட விதிமுறைகள் இந்த வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அச்சட்டங்களை மீறினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

(இ) **கையொப்பத்தை உறுதிபடுத்தல்** : விண்ணப்பத்திலும் பரீட்சை பிரவேச அனுமதி பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிபடுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் ஒருவர் தமது கையொப்பத்தை நிறுவன தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கொண்டு உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை பிரவேச பத்திர அனுமதி ஒன்றினை வழங்குவதனால் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவி தொடர்பில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றக்கொள்ளப்பட்டதாக கருதப்படமாட்டாது.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்** : பரீடசைக்கு தோற்றுபவர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்து விடயம் தொடர்பிலும் மண்டபாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிபடுத்த வேண்டும். அது தொடர்பில் கீழ்வரும் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

10. **பொய்யான தரவுகளை சமர்ப்பித்தல் தொடர்பான தண்டனைகள் :**

(i) இப்பரீட்சை தொடர்பான சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் அதற்கு தகைமையற்றவர் என தெரிய வரும்போது, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைப்பெறுகையில் அல்லது அதற்கு பிறகு அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தின் போது அவரது பரீட்சைக்கு தோற்றுவதற்கான வாய்ப்பு நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும். தகவல்கள் பிற்காலத்தில் தவறானவை என தெரியவருமிடத்து அவரினால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு காரணத்தை மூடி மறைப்பதற்காக என தெரியுமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் மேலும் கவனத்திற்கொள்ளப்படாததோடு இந்த பரீட்சையை காரணமாகக் கொண்டு வழங்கப்பட்ட நியமனமொன்றினை இரத்து செய்வதற்கு அல்லது அரச சேவையிலிருந்த நீக்குவதற்கு கீழ்படிய வேண்டும்.

11. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :**

11.1 பரீட்சை மொழி மூலம் :

i. பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைப்பெறும்.

**குறிப்பு**.-

a. விண்ணப்பதாரி ஒருவர் பரீட்சைக்கு தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

b. தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

11.2 பரீட்சை பெறுபேறுகள் :

i. இப்பரீட்சையில் எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளினதும் பரீட்சை பெறுபேறுகளை தனிப்பட்ட முறையில் அறிவிக்க அல்லது http://www.railway.gov.lk இணையத் தளத்தினூடாக வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ii. பரீட்சை நடாத்துவது தொடர்பில் மற்றும் பெறுபேறுகளை வழங்குவது தொடர்பில் புகையிரத பொது முகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும்.

11.3 பரீட்சை தொடர்பிலான பாடப்பரப்பு :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான எண்ணங்கள், ஆய்வு செய்வதற்கான திறமை, தீர்மானங்களை மேற்கொள்ளும் திறமை என்பவை பரீட்சிக்கப்படும் |
| விடயம் தொடர்பிலான தொழில்நுட்ப பரீட்சை | இயந்திரங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் அடங்கும் உலோக வகைகளின் சேர்க்கை தொடர்பில் சிறந்த மற்றும் போதியளவு பகுப்பாய்வு செய்வதற்கான அறிவு, மற்றும் Destructive மற்றும் non destrutive பரிசோதனைகள், இரசாயனவியல் மற்றும் பௌதீக பரிசோதனைகள் மற்றும் விஞ்ஞான மூலாதாரங்கள் கீழான பிரயோக பாடங்கள் மற்றும் அது தொடர்பான அறிவு பற்றி பரீட்சிக்கப்படும். |

12. ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையை அல்லது வெற்றிடம் அனைத்தும் நிரப்பாமல் விடுவதற்கு மற்றும் இங்கு விதிகள் ஏற்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும். இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகம்,
த. பெ. 355, ஒல்கோர்ட் மாவத்தை,
கொழும்பு 10,
2024, ஏப்பிறல் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

| | |
|---|---|
| பரீட்சைக்கு கோரிய மொழி மூலம்<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3<br>(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) | |
| பிரஜாவுரிமை<br>பரம்பரை ரீதியாக - 1<br>பதிவு செய்தலின் ஊடாக - 2<br>(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) | |

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் உதவி ஆய்வாளர் பதவியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024**

**Open Competitive Examination for Recruitment to the post of Research Assistant, Grade III, in Sri Lanka Railway Department - 2024**

01. முழுப்பெயர்
   i. சிங்களத்தில்/தமிழில் :...........................................................................................
   ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :...........................................................................................
   (உதாரணம் : HEARATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

02. நிரந்தர முகவரி :
   i. சிங்களத்தில்/தமிழில் :...........................................................................................
